2004 நவம்பர் 16] [பேரவைத் தலைவர்]

பாலஸ்தீன மக்களின் உரிமைகளுக்காகப் போராடிய தலைசிறந்த தலைவரும், வீரத் திருமகனும், ஒரு தலைசிறந்த ராஜதந்திரியாக வரலாறு படைத்தவரும், இந்தியா உட்பட பல்வேறு நாட்டுத் தலைவர்களுடன் நெருங்கிய நட்புக் கொண்டவரும், 1993 ஆம் ஆண்டு ஆஸ்லோவில் இஸ்ரேலுடன் ஏற்பட்ட உடன்பாட்டைத் தொடர்ந்து 1994 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் உலக அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவரும், பாலஸ்தீனியரின் தாயகத்தை மீட்டுத் தரும் இலட்சியத்துடன் பாலஸ்தீன மக்களை தன்பக்கம் ஈர்த்து வந்தவருமான பாலஸ்தீன அதிபர் திரு. யாசர் அராபத் அவர்கள் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் தேதி பாரீஸ் மருத்துவமனையில் மறைந்த செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. மறைந்த இத்தலைவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், இத்தலைவரின் மறைவினால் ஆற்றொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் பாலஸ்தீன மக்களுக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது."

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த தலைவருக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

(முற்பகல் 10-05

(ஆ) சட்டமன்றப் பேரவை முன்னாள் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானம். முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் தலைவர் அவர்கள் மறைவு குறித்து கீழ்க்காணும் இரங்கல் தீர்மானத்தை பேரவைமுன் வைக்கிறேன்.

"முனைவர் மு. தமிழ்க்குடிமகன் தலைசிறந்த இலக்கியவாதி; இனிய பண்பும், செயல் திறனும் கொண்டவர்; தமிழ்மீது அளப்பரிய பற்றுடையவர்; தமிழ் மொழி ஏற்றம் பெற்றிட தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்; தமிழில் பல்வேறு நூல்களை எழுதிய இணையற்ற எழுத்தாளர்; தமது எழுத்திலும் சொல்லிலும் பெருமைகள் பல பெற்றவர்;

[பேரவைத் தலைவர்] [2004 நவம்பர் 16

பரிதிமாற் கலைஞர், மறைமலை அடிகள், மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் ஆகியோர் வழியில் நின்று தனித் தமிழ் உணர்வை வளர்த்தவர்; சாத்தையா என்ற பெயரை தமிழ்மீது கொண்ட அளப்பரிய பற்றால் தமிழ்க்குடிமகன் என்று மாற்றிக்கொண்டவர்; பல்லாண்டுகள் ஆசிரியராகவும், கல்லூரி முதல்வராகவும் சிறப்பாகப் பணியாற்றியவர்; தமிழ்மொழிக்குச் சிறந்த எழுத்துப் பணி புரிந்துள்ளவர்; இவரது கவிதைத் தொகுப்புகள் படிப்போரின் உள்ளங்களைக் கவரும் சக்தி பெற்றவை; இவரது தமிழ்நடை பீடும் பெருமையும் வாய்ந்தது; தனித் தமிழ் இயக்கத்தில் தன்னை முற்றிலுமாக இணைத்துக் கொண்டவர்; வடமொழி மற்றும் ஆங்கிலச் சொற்களைத் தவிர்த்து தமிழ்ச் சொற்களைத் தனது பேச்சிலும், எழுத்திலும் கையாண்டவர்; தாம் ஆற்றிய தமிழ்ப் பணிக்காக 2002 ஆம் ஆண்டுக்கான தமிழக அரசின் கி.ஆ.பெ. விசுவநாதம் விருதினைப் பெற்றவர்; இளையான்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு 1989–91; 1996–2001 ஆகிய கால அளவில் பேரவை உறுப்பினராகவும் பணியாற்றிய முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் 21–9–2004 அன்று மறைவுற்றதை அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. அவர் 1989–91 கால அளவில் சட்டமன்றப் பேரவைத் தலைவராகவும், 1996–2001 கால அளவில் இந்து சமய அறநிலையத் துறை, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை அமைச்சராகவும் யாவரும் போற்றத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார். அவரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது".

இத்தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தான், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

மறைந்த முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன. பேரவை மீண்டும் நாளை (17–11–2004) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை காலை 10–07–க்கு ஒத்திவைக்கப்பெற்றது.